COMMISSIONER OF MUNICIPAL ADMINISTRATION
24
CHENNAI-600 005

**சுருக்கம்**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி – திருச்சிராப்பள்ளி தென்னூர் அண்ணாநகரில் தண்ணீர் விளையாட்டுப் பூங்கா அமைப்பதற்கு திருச்சி மாநகராட்சி – தமிழ்நாடு உள்கட்டமைப்பு நிதி சேவை நிறுவன (TNUIFSL) உதவியுடன் பொது மற்றும் தனியார் பங்கீட்டுடன் (PPP) செயல்படுத்த ஆணை வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.2) துறை

அரசாணை (நிலை) எண்.8 நாள்:22.1.2008

படிக்க:

1. ஆணையர் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி கடிதம் ந.க.எண்.4745/2007/இ2 (மையம்) நாள் 01.08.2007.
2. நகராட்சி நிர்வாக ஆணையர் கடிதம் ந.க.எண்.44171/2007/P-1, நாள் 30.08.2007.
3. மேலாண்மை இயக்குநர் (ம) முதன்மை செயல் அலுவலர் தமிழ்நாடு உள்கட்டமைப்பு நிதி சேவை நிறுவனம் கடிதம் TNUDF/ Projects/ Trichy/Theme Park, நாள் 29.11.2007.

******

ஆணை :

பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ஆணையாளர் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி மாமன்றத் தீர்மானத்தில் நிறைவேற்றியபடி (மாமன்றத் தீர்மானம் எண்.152, நாள் 28.6.2007) திருச்சிராப்பள்ளி தென்னூர் அண்ணா நகரில் தண்ணீர் விளையாட்டு பூங்கா கட்டமைப்பதற்கு ரூ.700.00 இலட்சம் மதிப்பீட்டுத் திட்டத்தில் கீழ் கண்டவாறு மூன்று கட்டங்களாக செயல்படுத்த அனுமதி பெற்றுள்ளதாக தெரிவித்துள்ளார்.

| | |
|---|---|
| முதற் கட்டப் பணிகளாக (phase I) | ரூ.222.37 இலட்சம் |
| இரண்டாம் கட்டப் பணிகளாக (phase II) | ரூ.105.00 இலட்சம் |
| மூன்றாம் கட்டப் பணிகளாக (phase III) | ரூ.372.63 இலட்சம் |
| | ரூ.700.00 இலட்சம் |

மேலும் மேற்குறிப்பிட்டப்பட்ட பணிகளில் தற்போது முதற் கட்டப்பணி (phase I)யினை மேற்கொள்ளுவதற்கு ரூ.222.37 இலட்சத்திற்கான நிர்வாக ஒப்பளிப்பு வேண்டியுள்ளார்.

2. மேலும் திருச்சிராப்பள்ளி தென்னூர், அண்ணா நகரில் அமைக்கப்படும் தண்ணீர் விளையாட்டு பூங்கா அமைக்க முதல் கட்ட பணிகளுக்கான(phase I) தொகை ரூ.222.37 இலட்சத்தில், 2007–2008–ம் ஆண்டு மாநகராட்சி வரவு செலவு திட்டத்தில் ரூ.100.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது, மீதமுள்ள ரூ122.37 இலட்சம் நடப்பு ஆண்டில் (2007–2008) திருத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்துக் கொள்ள மாமன்ற அனுமதி பெற்றுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

3. பார்வை இரண்டில் படிக்கப்பட்ட நகராட்சி நிர்வாக ஆணையரின் கடிதத்தில் திருச்சிராப்பள்ளி தென்னூர், அண்ணா நகரில் தண்ணீர் விளையாட்டு பூங்கா (water Theme Park) அமைப்பதற்கு ரூ700.00 இலட்சம் மதிப்பீட்டுத் தொகையில் முதற் கட்ட பணிக்கு (phase I ) ரூ.222.37 இலட்சத்திற்கு நிர்வாக ஒப்பளிப்பு ஆணையை வழங்க அரசுக்கு பரிந்துரை செய்துள்ளார்.

4. பார்வை மூன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில் மேலாண் இயக்குநர் மற்றும் முதன்மை நிர்வாகி, தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதி அவர்கள் தண்ணீர் விளையாட்டு பூங்கா திட்டத்தின் கட்டுப்படியாகும் நிதி சார்ந்த தன்மை குறித்து தாம் ஆய்ந்ததில் நுழைவு கட்டணம் ரூ.75/– குறிப்பிட்ட தண்ணீர் விளையாட்டு சவாரிகட்கு கூடுதல் கட்டணம் என்ற முறை, மற்றும் நுழைவு கட்டணம் ரூ.100/– எல்லா சவாரிகளுக்கும் இலவசம் என்கின்ற முறை ஆகிய இரண்டு முறைகளிலும் இத்திட்டம் கட்டுபடியாக கூடியதாகும் என தெரிவித்துள்ளார். மேலும் இத்திட்டம் பயனுற போதிய வாடிக்கையாளர் வருகையை உறுதிப்படுத்த நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு திருச்சி மாநகராட்சியை அறிவுறுத்தலாம் என்றும், இத்திட்டத்திற்குரிய நிர்வாக ஒப்பளிப்பு மற்றும் தொழில் நுட்ப ஒப்பளிப்பு ஆகியவைகளை பெற்று அதன் நகல்களை நிதி உதவி பெற கடன் மனுவுடன் இணைத்து தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதி நிறுவனத்திற்கு பரிசீலனைக்காக அனுப்புமாறு திருச்சி மாநகராட்சியை அறிவுறுத்தலாம் ® அல்லது இதனை கட்டி பராமரித்து ஒப்படைத்தல் முறையில் ( BOT முறை) திருச்சி மாநகராட்சியே இத்திட்டத்தை செயல்படுத்த அறிவுறுத்தலாம் எனவும் தெரிவித்துள்ளார்.

5. அரசு மேற்சொன்ன கருத்துருவினை கவனமுடன் பரிசீலித்து திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் தென்னூர் அண்ணாநகரில் தண்ணீர் விளையாட்டுப் பூங்கா கட்டமைக்கும் திட்டத்தினை தமிழ்நாடு உள்கட்டமைப்பு நிதி சேவை நிறுவனத்தின்

(TNUIFSL) ஆலோசனை மற்றும் நிதி உதவியுடன் பொது மற்றும் தனியார் பங்கீட்டு (PPP) அடிப்படையில் செயல்படுத்தலாம் என அரசு முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கே. தீனபந்து,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
ஆணையாளர், திருச்சி மாநகராட்சி, திருச்சி.
நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை-5.
மாநில கணக்காயர், சென்னை-15/18.
இயக்குநர், தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு நிதி சேவை நிறுவனம் (TNUIFSL) .
மேலாண் இயக்குநர் மற்றும் முதன்மை நிர்வாகி,
தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதி நிறுவனம் (TNUDF).

நகல்
மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைச்
செயலாளரின் தனிச் செயலாளர், சென்னை-9.
இதர கோப்பு/உதிரிநகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்